---

**இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை - 2013**

---

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச்சட்டத்தின் 33(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 2.1 அபிப்பிராயம்

-------------------------

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், சகல பொது முயற்சிகளும் அவர்களுடைய சொந்த முறைமைகள் மற்றும் சகல பிரதான செயற்பாடுகளை மேவுகின்ற கைநூல்கள் என்பவற்றை வைத்திருக்க வேண்டியிருந்த போதிலும் சபையானது அத்தகைய முறைமைகள் மற்றும் கைநூல்களை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**நிதிசார் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய அண்டின் போது பெறப்பட்ட அரசாங்க மானியங்கள் (சீராக்கப்பட்ட) மற்றும் ஏற்பட்ட மீண்டெழும் செலவினம் என்பவற்றின் விபரங்கள் மற்றும் முன்னைய ஆண்டின் சதவீதமாக மானியங்களின் அதிகரிப்பு என்பன கீழே தரப்படுகின்றன.

| விடயம் | 2013 ஆம் ஆண்டு | 2012 ஆம் ஆண்டு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பு | முன்னைய ஆண்டின் சதவீதமாக அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| அரசாங்க மானியங்கள் | 55,215,000 | 37,409,000 | 17,806,000 | 47 |
| மொத்த மீண்டெழும் செலவினம் | 56,365,201 | 41,914,896 | 14,450,305 | 34 |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை குறித்த வியாபார முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களின் மீளாய்விற்காக தாபிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, சபையானது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது பின்வரும் செயலாற்றல்களின் முன்னேற்றங்களை அடைந்திருக்கவில்லை.

| | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|
| ஆண்டின் போது பெறப்பட்ட ஆண்டறிக்கைகளின் எண்ணிக்கை | 1,322, | 1,443 | 1,716 |
| மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டறிக்கைகளின் எண்ணிக்கை | 751 | 302 | 213 |
| மீளாய்வு செய்ய வேண்டிய ஆண்டறிக்கையின் எண்ணிக்கையின் சதவீதமாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டறிக்கைகளின் எண்ணிக்கை | 57 | 21 | 12 |
| மீளாய்வில் பங்குபற்றியிருந்த தொழில்நுட்ப பதவியணியினர் | 14 | 6 | 6 |
| ஆண்டின் போது ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மீளாய்வுசெய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 58 | 50 | 35.5 |

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்கின்ற சோக்கத்திற்காக வெளித் தரப்பினர்களின் (மீளாய்வாளர்கள்) உதவி பெறப்பட்டிருந்தது. அந்த ஆண்டுகளில் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை முறையே 213, 302 மற்றும் 751 ஆக இருந்தது. சபையானது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் மேற்குறிப்பிட்ட சேவைகளிற்காக ரூபா 1,970,000 மற்றும் ரூபா 2,490,000 செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் அறிக்கையொன்று மீளாய்வு செய்கின்ற சராசரிக் கிரயம் முறையே ரூபா 2,623 மற்றும் ரூபா 8,425 ஆக உள்ளன. மீளாய்வாண்டில் சாதகமான முரண் உள்ளக மீளாய்வாளர்களை சேர்ப்பதன் காரணமாக இருந்தன.’

**4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்**

இணையதளத்தை தரமுயர்த்துவதற்காக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான பாதீட்டில் ரூபா 1,250,000 மற்றும் ரூபா 850,000 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் சபையானது இலக்கினை அடைய முடியாதிருந்தது.

**4.3 அதிகாரச்சட்டத்தின் திருத்தம்**

சபைக்கு அவர்களுடைய ஆண்டறிக்கையை சமர்ப்பித்திருக்காத நிறுவனங்களிடமிருந்து தண்டப்பணங்களை சாட்டுதல் செய்வதற்கு ஏற்பாடுகளை செய்வதற்கு சபையின் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு பொது முயற்சிகள் குழுவால் சபையானது நெறிப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால், சபையானது 2014 யூன் 30 வரை அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் படி, பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி குறைந்தது நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 3 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2013 மார்ச் 21 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பின்வரும் தகவல்கள் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் படி கூட்டிணைந்த திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) சபையின் தற்போதைய வளங்களின் கீழ் மனிதவள மற்றும் முகாமைத்துவ திறன்கள் மீதான தகவல்கள்.

(ii) 2012 ஆம் ஆண்டு தொடர்பான தகவல்கள் மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள்

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பாதீடு 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் படி, பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், இது 2013 ஏப்ரல் 08 இல் 03 மாதங்ள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு பின்வரும் விடயங்களை உள்ளடக்கவில்லை.

(i) ஆண்டிற்கான பாதீடிடப்பட்ட வருமானம்

(ii) ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பாதீடிடப்பட்ட ஐந்தொகை

(iii) ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(இ) பாதிடப்பட்ட செயவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆளணி நிர்வாகம்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சிறுசெலவுக் காசு முகாமைத்துவம்.